Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
STC.No.36/2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : செண்பகவேலன் | Father/Husband Name | : காந்தி |
| Calling | : | Age | : |
| Date | : 23.07.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of 07.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது விருதுநகர் மாவட்டம், கீழபரளச்சி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.10.2018-ம் தேதி 18.00 மணிக்கு காவலர்கள் கண்ணன் மற்றும் கிரிதரன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்மந்தமாக கீழவளவு காவல்நிலைய எல்கைக்குட்பட்ட கீழையூர் – அட்டப்பட்டி அருகே ரோந்து செய்து கண்காணித்து வரும்போது அதே ரோட்டில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வரும் கணேசன் என்பவரின் பெட்டிக்கடையில் அங்கு வரும் நபர்களுக்கு குடிப்பதற்காக மது ஊற்றி கொடுத்துக்கொண்டிருந்தார். மது அருந்திக்கொண்டிருந்த நபர் போலீஸ் பார்ட்டியை கண்டதும் அங்கிருந்து அந்த நபர் தப்பி ஓடிவிட்டார். அந்த பெட்டிக்கடைகாரரான எதிரி கணேசன் என்பவரை விசாரணை செய்து அவர் எந்தவொரு அரசு அனுமதியுமின்றி சுயலாபம் கருதி ஊற்றி கொடுத்த 180 ml அளவுள்ள Accord Brandy ஊற்றி

கொடுத்தது போக 90 ml –யும் ஒரு பிளாஸ்டிக் கப்பையும், அங்கு தனிநபர் யாரும் சாட்சி சொல்ல முன்வராததால் போலீஸ் பார்ட்டிகளை சாட்சியாக வைத்து 18.30 மணிக்கு அத்தாட்சி மூலம் கைப்பற்றி கணேசன் என்பவரை காரணம் கூறி கைது செய்தேன். (அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) கைப்பற்றிய சொத்து மற்றும் கைது செய்யப்பட்ட எதிரியுடன் 19.00 மணிக்கு கீழவளவு நிலையத்திற்கு வரப்பெற்று அத்தாட்சியின்படி கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.283/2018, பிரிவு 4(1)(k) TNP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அன்றைய தினம் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் காவல்நிலைய பிணையில் விடுவித்தேன். கைப்பற்றிய சொத்துக்களை காவலர் கண்ணன் மற்றும் கிரிதரன் முன்னிலையில் அழிக்கப்பட்டு அழத்தல் மகஜர் தயார் செய்யப்பட்டது. **(அந்த அழித்தல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) இத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 4(1)(k) TNP Act–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு நான் தானாக தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் காலம் –3பியில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் இரவு 19.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அன்றையதினம் ரோந்து பணி சென்றதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேன்

என்றால் பதிவு செய்வது வழக்கும், ஆனால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை நானே தாக்கல் செய்தது என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள கீழையூர், அட்டப்பட்டி என்பது ஆள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் கிராம சாலை என்பதால் அதிக மக்கள் நடமாட்டம் இருக்கும். பொதுமக்கள் சாட்சி முன்னிலையில் எதிரியிடமிருந்து பொருட்களை கைப்பற்றியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை 10–ம் காலத்தை முழுமையாக பூர்த்தி செய்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் காவலருடன் ரோந்துக்கு தனியாக சென்றோமா அல்லது சேர்ந்து சென்றோமா என்றால் நான் ஒரு இருசக்கர வாகனத்திலும், காவலர்கள் மற்றொரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம்.

2) என்னிடம் காட்டப்படும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் நீதிமன்ற சாட்சியம் அளித்தபோது செய்த கையொப்பம் போல் தான் எப்போதும் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் எங்களது காவலர்களின் கையொப்பம் என்றால் சரிதான். அழித்தல் மகஜரில் உள்ள கையொப்பத்திற்கும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை, நான் சட்டத்திற்கு உட்பட்டு இவ்வழக்கு ஆவணங்களை தயார் செய்யவில்லை, நான் சொன்னது போல் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை, என்னுடைய காவல்நிலையத்தில் உள்ள மதுபானத்தை வைத்து வழக்கிற்கு ஏற்ப எதிரி மீது

வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு புள்ளியல் கணக்கிற்காக போடப்பட்டு வழக்கு என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படுவது யாருடைய முன்னிலையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.